# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,432 — 1939 ம் ஞூ மாசிமீ 17 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### காணிக் குத்தகை விற்பனை அறிவித்தல்.

பின்னால் விபரிக்கப்படும் பூமியை 60 வருஷக் குத்தகையில் பூமிக்குத்தகையின் கட்டுப்பாடுகளின் பிரகாரம் 1939 ம் ஆண்டு சித்திரைமீ 4 ந் திகதி காலை 11.30 மணிக்கு திரிகோணமலை டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசன்றர் திரிகோணமலைக் கச்சேரியில் ஏலத்திற்கூறி விற்பார்.

குத்தகையின் நிபந்தனைகளை திரிகோணமலை உதவி ஏசன்றரிடமிருந்தும் பூமியின் படத்தை கொழும்பிலிருக்கும் நில அளவைக் காரியஸ்திரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

திரிகோணமலை டிஸ்திறிக்கின் கட்டுக்குளப்பற்றில் குச்சவெளிக் கிராமத்திலிருக்கும் முடிக்குரிய மூன்று துண்டுத் தரைகள்.

பிரதமபடம் A 367.

| கண்டம். | பூமியின் பெயர். | விபரம். | காணி கேட்டிருப்பவரின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. | முதல் 15 வருஷங்களின் குத்தகைக் கிரயம். ரூ. ச. | வருடாந்த வாடை ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கப்பல்கேணிக்காடு | ஒரு பகுதி துப்பவராக்கப்பட்ட பறுகுக் காடு | — | 0 0 18* | — | — |
| 2 | ஷை | காடு | நுககொடையிலிருக்கும் டக்ரர் சாள்ஸ் ஹென்றிக் இகல்ஸ்கானிவெல் | 2 2 12 | 30 84 | 5 4 |
| 3 | ஷை | சிறுகாடு | — | 0 2 38† | — | — |

* பிரதான ரேட்டிற்கு விடப்பட்ட ரிசவேசன் (சேமித்துவைக்கிறதற்காக.

† கடற்கரைக்காக விடப்பட்ட ரிசவேசன் (சேமித்துவைக்கிறதற்காக)

காணிக் கமிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1939 ம் ஞூ (பெப்ருவரி) மாசிமீ 14 ந் உ.

சி. எல். விக்கிரமசிங்ஹ,
காணிக் கமிஷனர்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அரசினர் சுயபாஷைப் பெண் பள்ளிக்கூடம் கட்டுவதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

அனுபந்தம் 3 ம் கடைசிக் கிராம பிரதமபடத்து இல : 976. குறிச்சி—வடமேல் மாகாணத்தில் குருனுக்கல் டிஸ்திறிக்கில் கட்டு கம்பள ஹத்பத்திவில் யட்டிக்கஹா கோறளை தெற்கில் அஸ்வெத்தும கிராமம்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 41 | பரகாவாகொட்டுவ அல்லது தும்கலவத்த | தோட்டம் | அஸ்வெத்தும கிராமத்திலிருக்கும் ஏ. எச். எம். குமாரிஹாமியும் ஏ. எச். எம். டிங்கிரிஅம்மாவும் | 0 2 10·7 |
| 42 | முருத்தகஹகும்புறபில்லேவ | ஷை | கனம். எம். ஆர். டி. சில்வா, தண்டகமுவ | 0 0 1·5 |
| 43 | ஷை | ஷை | ஷை | 0 0 0·6 |
| 44 | ஷை | ஷை | ஷை | 0 0 1·2 |
| 45 | தும்கலவத்த | ஷை | டீ. ஏ. எம். அப்துல் ஹமித், தண்டகமுவ | 0 1 16·7 |
| 46 | தன்கஸ்பிற்றிய | ஷை | அஸ்வத்துமைவிலிருக்கும் ஏ. எச். எம். குமாரிஹாமியும், ஏ. எச். எம். டிங்கிரி அம்மாவும், லிலி விக்ரமசேக்கரவும் | 0 0 23·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக்காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதினால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஞூ (ஏப்பிரல்) சித்திரை மாசம் 20 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு குலியாப்பிட்டிய வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருனுக்கல் கச்சேரி,
1939 ம் ஞூ (பெப்ருவரி) மாசிமீ 14 ந் உ.

எல். எஸ். பி. பெறேரு,
உதவி அரசாட்சி ஏசண்டு, குருனுக்கல்.

51——J. N. 81608—149 (2/39)
T 1

1876 ம் ஷு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பொகறபாவ என்னும் கிராமத்தில் ஓர் பாடசாலை கட்டுவதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : 315. குறிச்சி—இகலப்பொகறபாவ.

| துண்டு. | காணியினது பெயர் | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 210 | கனத்தவத்த | .. வெறுநிலம் | .. ஜே. எம். ஜயவர்த்தன அப்புஹாமி | .. 0 0 8·2 |
| 211 | ஷை | .. தோட்டம் | .. ஏ. டீ. ஆரோன் அப்புஹாமி | .. 0 0 34·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால அக்காணிகளை ஆட்சி ஏற்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது எழுத்தில் நியமிக்கப்பட்ட அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஷு (மார்ச்) பங்குனி மாசம் 28 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1939 ம் ஷு (பெப்ரவரி) மாசிமீ 13 ந் உ.

ஆர். எம். டேவிஸ்,
சப்பிரகாம மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

நிலாவெளி உப்புக்குதத்திலிருந்து மட்டக்களப்பு உப்புக்குதத்திற்கு 21,000 அந்தர் உப்பை 1939 ம் ஆண்டு வைகாசி மாதம் 15 ந் திகதிக்கும் ஆவணி மாதம் 31 ந் திகதிக்குமிடையில் மூன்று வாய்தாக்களில் ஒப்புக் கொடுப்பதற்கு கேள்விக்கடுதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆனி மாசம் 30 ந் திகதிக்குமுன் 7,000 அந்தர்
ஆடி மாசம் 31 ந் திகதிக்குமுன் 7,000 அந்தர்
ஆவணி மாசம் 31 ந் திகதிக்குமுன் 7,000 அந்தர்

2. நிலாவெளியிலிருந்து ஒரு அந்தர் நிறுத்து சாக்குகளில் போடும் செலவையும், சாக்குகளின் பெறுமதியையும் சேர்த்து அடுக்குச் செலவோடு என்ன வீத கூலிக்கு ஏற்றக்கூடுமென்று கேள்விக் கடுதாசியில் காட்டப்படவேண்டும்.

3. ஒப்பந்தக்காரன் தனது செலவில் சாக்குகளைக் கொடுக்கவேண்டும். சாக்குகளில் உப்பு நிரப்பப்பட்டபின் அவற்றில் முத்திரை வைத்துக் கொடுக்கப்படும். பின் ஒப்பந்தக்காரன் இம்முத்திரைகள் பழுதடையா வண்ணம் மட்டக்களப்பு உப்புக்குதத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டும். குதத்தில் உப்பைச் சொரிந்தபின் வெறுஞ் சாக்குகளை ஒப்பந்தக்காரனிடம் திருப்பிக் கொடுக்கப்படும்.

4. சாக்குகளெல்லாம் ஒரே அளவுள்ளதாயும் 1 அந்தர் அல்லது 1¼ அந்தர் கொள்ளக்கூடியதாயுமிருக்கவேண்டும். எந்த அளவுகொண்ட சாக்குகளை குத்தகைக்காரன் விரும்புகிறானென்று கேள்விக்கடுதாசியில் காட்டப்படவேண்டும்.

5. எல்லா ஒப்பப் பத்திரங்களும் இரண்டு பிரதிகளில் எழுதப்பட்டும், மெழுகு முத்திரையிடப்பட்டு பின்வரும், விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும் :—

ஒப்பப்பத்திர சங்கத்தலைவர்,
(Chairman of the Tender Board.)
அரசினர் பொக்கிஷசாலை,
(தபால்பெட்டி நம்பர். 500),
கொழும்பு.

6. ஒப்பப்பத்திரங்கள் அரசினர் பொக்கிஷசாலையில் அதற்காக வைக்கப் பட்டிருக்கும் பெட்டியில் போடப்படவேண்டும். தபால் மூலமாய் அனுப்பும் பொழுது பதிவு கடிதமூலமாய் அனுப்பப்படல் வேண்டும்.

7. கேள்விக்கடுதாசியின் உறையின் இடப்பக்க மூலையில் " நிலாவெளியிலிருந்து மட்டக்களப்பு உப்பு ஏற்றக் கேள்விக்கடுதாசி " யென்று எழுதப்படல்வேண்டும். கேள்விக்கடுதாசிகளை, 1939 ம் ஆண்டு பங்குனி மாதம் 21 ந் திகதி செவ்வாய்க்கிழமை மத்தியத்திற்கு பிந்தாமல் ஒப்பப்பத்திர சங்கத்தலைவரிடம் சேர்க்கப்படல் வேண்டும்.

8. கேள்விக்கடுதாசிகள் குறிக்கப்பட்ட மாதிரிப்பத்திரங்களில் எழுதப்படல் வேண்டும். அம்மாதிரிப்பத்திரங்களை மட்டக்களப்புக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட மாதிரிப் பத்திரங்களில் எழுதப்படாத கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. ஒப்பப்பத்திரங்களிலுள்ள எல்லா மாற்றங்கள் அல்லது திருத்தல்கள் ஒப்பப்பத்திரக்காரரின் தலையெழுத்துக்களால் அத்தாட்சிப்படுத்தப் படல் வேண்டும்.

10. கேள்விக்காகிய மாதிரிப்பத்திரம் பெறுவதற்கு ரூபாய் 50 எந்தக் கச்சேரியிலாவது கட்டிப் பற்றுத்துண்டு காண்பிக்கவேண்டும். கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று எழுத்தில் அறிவித்தல் பெற்று பத்து நாட்களுள் ஒப்பந்தம் அல்லது உறுதி முடிக்க அல்லது ஏற்றுக்கொள்ளக் கூடிய பிணை கொடுக்கத் தவறினால் கட்டிய பணம் ரூ. 50 ம் அரசாட்சியாரால் பறிமுதலாக்கப்படும். அதுவுமல்லாமல் மேற்கூறியபடி செய்யத் தவறிய கேள்விக்காரன் அரசாட்சியாரின் ஒப்பந்த வேலைகளில் இனிச் சேர்மானமில்லாதவராய்க் கழிக்கப்பட்டு. இடாப்பில் சேர்க்கப்படக்கூடியவராயிருப்பர். ஒப்பந்தத்திற்கு கையொப்பமிட்டதின்மேல் கட்டிய ரூபாய் 50 ம் திருப்பிக்கொடுக்கப்படும்.

11. ஒப்பந்தவேலையை நடப்பிப்பதற்கு பிணைகாரராய் வருவோமென்று சம்மதம் சொல்லித் தங்கள் மேல் விலாசங்களைக் கொடுக்கும் இரண்டு தக்க மனிதர்களால் கையொப்பமிட்ட கடிதமொன்று ஒவ்வொரு கேள்விக் கடுதாசியோடும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

12. ஒப்பந்த வேலை சரிவர நிறைவேற்றுவதற்காய் கொடுக்கும் உறுதியில் போதிய பிணைகாரர் சேரல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் கிடைத்த பின்னர் கட்டவேண்டிய காசுப்பிணை எவ்வளவென்பதைத் தீர்மானிக்கப்படும். வேறு தேவையான விளம்பரங்களை மட்டக்களப்புக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

13. மேற்கூறிய கட்டுப்பாடுகள் யாவும் சரிவர நிறைவேற்றப்பட்டிராத கேள்விகளொன்றும் கவனிக்கப்படமாட்டாது.

14. அரசாட்சி ஒப்பந்தக்காரரின் இடாப்பிலிருந்து கழிக்கப்பட்ட எதொருவருக்கும் ஒப்பந்தம் அவருடன் ஒற்றும், தனித்தும், வேறு ஆட்களுடனாவது கொடுக்கப்படமாட்டாது, அல்லது ஒப்பந்தக்காரன் அரசாட்சி ஒப்பந்தக்காரரின் கழிக்கப்பட்ட இடாப்பிலிருக்கும் எதொருவரையும் அல்லது கீழ்மாகாண ஏசன்றர் அவர்கள் தமக்குத் தெரிந்த போதிய விஷயங்களினிமித்தம் எழுத்தில் தடைபண்ணியவரையும் ஒப்பந்த வேலை செய்ய நியமிக்கப்படாது.

15. கேள்விகளி லொன்றை அல்லது எல்லாவற்றையும் கையேராமல் தள்ளிவிட அல்லது ஒரு கேள்வியின் எந்தப் பகுதியையாவது ஏற்க அரசாட்சியாருக்குத் தத்துவமுண்டு.

க. சுப்பிரமணியம்,
கீழ் மாகாண அரசாட்சி ஏசன்றருக்காக.

மட்டக்களப்புக் கச்சேரி,
1939 ம் ஆண்டு மாசிமீ 8 ந் உ.

---

## சுப்பிறீங்கோட்டு அறிவித்தல்கள்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது கண்டி கலியாண நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் கண்டி டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1939 ம் ஆண்டு (மார்ச்) பங்குனிமாதம் 10 ந் திகதியாகிய வெள்ளிக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும். ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

டபிள்யூ. எல். மோர்வ்பி,
மத்திய மாகாண பிஸ்கால்.

கண்டி பிஸ்கால் கந்தோர்,
1939 ம் ஷு (பெப்ருவரி) மாசிமீ 10 ந் உ.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் அனுராசபுர டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1939 ம் ஆண்டு (மார்ச்) பங்குனி மாதம் 10 ந் திகதியாகிய வெள்ளிக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும். ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

ஏ. பி. கறலியத்த,
உப பிஸ்கால்.

அனுராசபுர பிஸ்கால் கந்தோர்,
1939 ம் ஷு (பெப்ருவரி) மாசிமீ 10 ந் உ.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் கேகாலை டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1939 ம் ஆண்டு (மார்ச்) பங்குனி மாதம் 10 ந் திகதியாகிய வெள்ளிக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும். ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

ஆர். எம். டேவிஸ்,
சபரகமுவா பிஸ்கால்.

இரத்தினபுர பிஸ்கால் கந்தோர்,
1939 ம் ஷு (பெப்ருவரி) மாசிமீ 10 ந் உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.